14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை 2025 விளையாட்டுப் போட்டிகள் சென்னை மற்றும் மதுரையில் நடைபெறுவதையொட்டி நேற்று திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வித்யாசாகர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டத்திற்கு வருகை தந்த உலக்கோப்பை போட்டிக்கான வெற்றி கோப்பையினை வரவேற்று போட்டியின் சின்னமான காங்கேயனை அறிமுகப்படுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, மாவட்டக் கழக பொறுப்பாளர்கள் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், உடுமலைப்பேட்டை நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆ.புனிதா அந்தோணியம்மாள், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன் நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு, இராசிபுரம் நகரங்கள், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம் , கொல்லிமலை, நாமக்கல் ஒன்றியம், புதுச்சத்திரம் வடக்கு தெற்கு, மோகனூர், நாமகிரிப்பேட்டை ஒன்றியங்கள், நாமகிரிப்பேட்டை,, ஆர்.புதுப்பட்டி, சீராப்பள்ளி, பட்டணம், பிள்ளாநல்லூர், மோகனூர் ஆகிய பேரூரில் கடந்த செப்டம்பர் 2024 முதல் அக்டோபர் 2025 வரை மறைந்த 739 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு கலைஞர் குடும்ப நலநிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – அப்துல் வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கேரள மாநில உள்ளாட்சித் தேர்தல் பரப்புரை நிறைவு விழா!

மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

திருவனந்தபுரம். நவ. 23 -

கேரள மாநில உள்ளாட்சித் தேர்தல் பரப்புரை நிறைவு விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அப்துல் வகாப் எம்.எல்.ஏ., பங்கேற்கின்றனர் என கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:

கேரள மாநில உள்ளாட்சித் தேர்தல் இரண்டு கட்டங்களாக வரும் டிசம்பர் 9, 11 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறுகிறது. டிசம்பர் 13 ஆம் தேதி ஓட்டு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் 13 கூட்டணி கட்சிகள் உள்ளடக்கிய (எல்.டி.எப்) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தலைமையிலான கூட்டணி ஒரு புறம் 11 கூட்டணி கட்சிகள் உள்ளடக்கிய (யூ.டி.எப்) காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி மறுபுறம் இதற்கு இடையில் பாரதிய ஜனதாக் கட்சியின் பல கட்சிகள் உள்ளடக்கிய கூட்டணி என மூன்று கூட்டணி கட்சிகள் உள்ளடக்கிய அணிகள் போட்டியிடுகின்றன.

இதற்கு இடையில் தனி ஒரு கட்சியாக கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழகம் கேரள மாநில தேர்தலில் முதன் முறையாக கழக சின்னமான உதயசூரியன் சின்னத்தில் தனித்து களம் காண்கிறது. இந்த தேர்தல் பரப்புரை வரும் 7.12.2025 ஞாயிற்றுக் கிழமை மாலை நிறைவு பெறுகின்றது.

இந்த பரப்புரை நிறைவுபெறும் அன்று கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதியில் உள்ள புனலூர் நகராட்சித் தேர்தலில் போட்டியிடும் 9 நகராட்சி வார்டு வேட்பாளர்களை ஆதரித்து வாக்குகள் கேட்டு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் பிரச்சாரம் நிறைவு செய்து சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சி கேரள மாநில திமுக அமைப்பாளரான எனது (கே.ஆர். முருகேசன்) தலைமையிலும் தென்காசி முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ.பத்மநாபன் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜி ராஜ் வரவேற்புரை ஆற்றுகிறார். முன்னதாக கேரள மாநில தி.மு.க.வின் நான்கு சர்க்கர வாகனம், ஆட்டோ, மோட்டார் சைக்கிள் ஊர்வலத்தை பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழக செயலாளர் அப்துல் வகாப் கழக கொடி அசைத்து தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகப் பொருளாளர் ஐ.கேட்சன், குழித்துறை நகர்மன்றத் தலைவர் பொன். ஆசைத் தம்பி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக முன்னாள் துணை செயலாளர் ஐ.ஜான்கிறி ஸ்டோபர், கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் சிற்றாறு ரவிச்சந்திரன், பலுகல் பேரூராட்சி தலைவர் லிஜி விஜின், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் ததேயூ பிரேம் குமார், பளுகல் பேரூராட்சி செயலாளர் போஸ், முன்னாள் திருவட்டாறு ஒன்றிய கழக செயலாளர் ஒய்.ஆர்.எஸ் ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய கழக துணை செயலாளர் கலைகிரி, சிறுபான்மை அணி அமைப்பாளர் அமானுல்லா, களியல் பேரூராட்சி முன்னாள் துணை தலைவர் மனோகரன், கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரி குமார், துரை பேச்சிமுத்து, அருள் ஜோதி, திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ், குன்னிக்கோடு சுரேஷ், புவனேஷ், ராமர், சதாசிவம் ஆசாரி, அச்சு பிலால், அய்யப்பன், ரினுராஜன், ராணி, சுலோச்சனா, ஹேமா மற்றும் கழக நிர்வாகிகள் சிறப்புரை ஆற்றுகிறார்கள். நிறைவாக நகராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சார்பில் புனலூர் டவுன் வார்டு வேட்பாளர் ஏ.கே.நவாஸ் நன்றி உரையாற்றுகிறார். இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள பதினான்கு மாவட்ட கழக செயலாளர்கள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண் 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) பணிமனை நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கு தொ.மு.ச. பேரவையின் பொருளாளர் **திரு. கோ.சி.வள்ளுவன்** அவர்கள் மேலிடப் பார்வையாளராகவும், வழக்கறிஞர் **திரு. அ.சரவணன்,** கழக தணிக்கைக் குழு உறுப்பினர் அவர்கள் தேர்தல் ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டு தேர்தல் கால அட்டவணை 18.10.2025 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி வேட்பு மனுக்கள் பெறப்பட்டு பரிசீலனை முடிந்த நிலையில் சில நிர்வாக காரணங்களால் மறு அட்டவணை வெளியிட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதன்படி கீழ்க் கண்டவாறு மறு அட்டவணை வெளியிடப்படுகிறது.

பணிமனை நிர்வாகிகள் தேர்தல்
தேர்தல் கால மறு அட்டவணை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனை வாரியாக) - 08.12.2025 காலை 11.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் - 18.12.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள்தோறும்) - 25.12.2025 காலை 11.30 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு (பணிமனைகள்தோறும்) - 30.12.2025 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தேர்தல் தொடர்பான இதர அறிவிப்புகளில் மாற்றம் ஏதுமில்லை.

கலைஞரகம்
சென்னை - 17
நாள்- 21-11-2025.

மு.சண்முகம்
பொதுச்செயலாளர்
தொ.மு.ச.பேரவை

நவ. 27 – இளைஞர் எழுச்சி நாளையொட்டி நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் –

பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - 100 நலஉதவி நிகழ்ச்சிகள்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், நவ. 23 -

நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாளையொட்டி நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவது மற்றும் 100 நலத்திட்ட நிகழ்ச்சிகள் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகர் கலைஞர் அறிவாலயம் இனமான பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் ராணி, மாவட்ட துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன், தலைமச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர், துணை மேயர் பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த் சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அசோக்குமார், ராமசுவாமி , நவலடி, பழனிவேல், ஜெகநாதன், பாலசுப்பிரமணி, செந்தில் முருகன், எம்.பி.கௌதம், ஜெயபிரகாஷ், ஆர்.எம். துரைசாமி,

பேரூர் செயலாளர்கள் தனபாலன், முருகேசன், செல்லவேல், சுப்பிரமணி, ஜெயக்குமார் பொன்.நல்லதம்பி பழனியாண்டி, அன்பழகன், கண்ணன், ராஜேஷ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் பொன் சித்தார்த், கிருபாகரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், நகர் மன்ற,பேரூர் மன்ற தலைவர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக நாமக்கல் கிழக்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நவம்பர் 27ம் தேதி அன்று பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படும்.

ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் மாவட்ட சார்பு அணிகள் சார்பாக நவம்பர் 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் ஆதரவற்றோர் இல்லத்திற்கு உணவு வழங்குதல், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளி மாணவ செல்வங்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல் , தூய்மை காவலர்களுக்கு மதிய உணவு வழங்குதல், கழக மூத்த முன்னோடிகளுக்கு வேட்டி வழங்குதல், போன்ற 100 இடங்களில் நலத்திட்ட நிகழ்ச்சிகள் மற்றும் கழக கொடி ஏற்றி சர்க்கரை பொங்கல் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

கோவை வடக்கு மாவட்டம்

மேட்டுப்பாளையம் வடக்கு, காரமடை ஆகிய நகரங்கள் - கோவைப்புதூர் பகுதி மற்றும் ஆலந்துறை பேரூர்க் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் வடக்கு நகரச் செயலாளர் மு.முகமதுயூனுஸ் அவர்களுக்குப் பதிலாக திரு. **அ. அசரப் அலி** (4, உப்பு கிணைத்துப்பேட்டை, காவல்நிலையம் பின்புறம், மேட்டுப்பாளையம், கோவை - 641 301) அவர்கள் **மேட்டுப்பாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளராகவும்;**

காரமடை நகரச் செயலாளர் ஆர்.வெங்கடேஷ் அவர்களுக்குப் பதிலாக திரு.**கே.ஜி.குருபிரசாத்** (15-எல், சிவன்புறம் காலனி, வேளாங்கண்ணி சர்ச் எதிரில், காரமடை, கோவை - 641 301) அவர்கள் **காரமடை நகரக் கழகப் பொறுப்பாளராகவும்;**

கோவைப்புதூர் பகுதிப் பொறுப்பாளர் மு.ராஜேந்திரன் அவர்களுக்குப் பதிலாக திரு.மூ.முரளி, (21-சி, அலமுநகர், கோவைப்புதூர், கோவை - 641 042.) அவர்கள் **கோவைப் புதூர் பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும்;**

தொண்டாமுத்தூர் வடக்கு ஒன்றியம், ஆலந்துறை பேரூர்ச் செயலாளர் எ.கே.ரங்கசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **என்.எம்.ராமமூர்த்தி,** (6/57, தண்ணீர் பந்தல் தோட்டம், நாதேகவுண்டன்புதூர் அஞ்சல், வலையங்குட்டை, ஆலந்துறை (வழி), கோவை - 641 101.) அவர்கள் **ஆலந்துறை பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 20.11.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் ஆனைமலை வட்டம் நவமலை மலைவாழ் மக்கள் குடியிருப்பு பகுதியைச் சார்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாகளை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி வழங்கினார். உடன் பொள்ளாச்சி சார் ஆட்சியர் ரெ.ராமகிருஷ்ண சாமி, பொள்ளாச்சி நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், வட்டாட்சியர்கள் திரிபுரசுந்தரி, ஜெயகுமார் ஆகியோர் உள்ளனர்.

தருமபுரி மாவட்ட வளமையம் ஊராட்சிகள் திறன் வளர்ப்பு பயிற்சி நிறுவன மையத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் நடத்தப்படும் ஊட்டமிகு சிறுதானிய உணவுத் திருவிழாவை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் தருமபுரி எம்.எல்.ஏ. வெங்கடேஸ்வரன், நகர் மன்றத் தலைவர் லட்சுமி மாது, ஒன்றிய செயலாளர்கள் ஏ.எஸ்.சண்முகம், பச்சியப்பன் ,அரூர் நகர செயலாளர் முல்லை ரவி மற்றும் அதிகாரிகள்,விவசாயிகள் கலந்து கொண்டனர்.